# யூலை – 19 – வெள்ளி

**“மீட்பின் கிண்ணத்தைக் கையில் எடுத்து,
ஆண்டவரது பெயரைத் தொழுவேன்“ - திபா 116 : 13**

-----------------------------------------------------------------

## முதல் வாசகம் : விடுதலைப் பயணம் 11:10– 12:14

அக்காலத்தில் மோசேயும் ஆரோனும் இவ்வருஞ்செயல்கள் அனைத்தையும் பார்வோன்முன் செய்தனர். ஆண்டவர் பார்வோனின் மனம் இறுகிவிடச் செய்ததால், அவன் இஸ்ரயேல் மக்களைத் தன் நாட்டிலிருந்து போகவிடவில்லை! எகிப்துநாட்டில் ஆண்டவர் மோசேக்கும் ஆரோனுக்கும் பின்வருமாறு கூறினார். உங்களுக்கு மாதங்களில் தலையாயது இம்மாதமே! ஆண்டில் உங்களுக்கு முதல்மாதமும் இதுவே! இஸ்ரயேல் மக்கள் கூட்டமைப்பு முழுவதற்கும் நீங்கள் அறிவியுங்கள் அவர்கள் இம்மாதம் பத்தாம்நாள், குடும்பத்துக்கு ஓர் ஆடு, வீட்டிற்கு ஓர் ஆடு என்று தேர்ந்தெடுத்துக் கொள்ளட்டும். ஓர் ஆட்டினை உண்ண ஒரு வீட்டில் போதிய ஆள்கள் இல்லையெனில், உண்போரின் எண்ணிக்கைக்கும் உண்ணும் அளவுக்கும் ஏற்ப அண்டை வீட்டாரைச் சேர்த்துக் கொள்ளட்டும். ஆடு குறைபாடற்றதாக, கிடாயாக, ஒரு வயது குட்டியாக இருக்கவேண்டும். தேர்ந்தெடுப்பது வெள்ளாடாகவோ செம்மறியாடாகவோ இருக்கலாம். இம்மாதம் பதினான்காம் நாள்வரை அதை வைத்துப்பேணுங்கள். அந்நாள் மாலை மங்கும் வேளையில் இஸ்ரயேல் மக்கள் கூட்டமைப்பின் அனைத்துச் சபையும் அதை வெட்டவேண்டும். இரத்தத்தில் சிறிதளவு எடுத்து, உண்ணும் வீடுகளின் இரு கதவு நிலைகளிலும், மேல்சட்டத்திலும் பூசவேண்டும். இறைச்சியை அந்த இரவிலேயே உண்ணவேண்டும். நெருப்பில் அதனை வாட்டி, புளிப்பற்ற அப்பத்தோடும் கசப்புக் கீரையோடும் உண்ண வேண்டும். அதைப் பச்சையாகவோ நீரில் வேகவைத்தோ உண்ணாமல், தலைகால்கள், உட்பாகங்கள் முழுவதுமாக நெருப்பில் வாட்டி, அதனை உண்ணுங்கள். அதில் எதையுமே விடியற்காலைவரை மீதி வைக்கவேண்டாம். காலைவரை எஞ்சியிருப்பதை நெருப்பால் சுட்டெரியுங்கள். நீங்கள் அதனை உண்ணும் முறையாவது. இடையில் கச்சைகட்டி, கால்களில் காலணி அணிந்து, கையில் கோல்பிடித்து விரைவாக உண்ணுங்கள். இது ”ஆண்டவரின் பாஸ்கா”. ஏனெனில், நான் இன்றிரவிலேயே எகிப்து நாடெங்கும் கடந்துசென்று, எகிப்து நாட்டில் மனிதர் தொடங்கி விலங்குவரை அனைத்து ஆண்பால் தலைப்பிறப்பையும் சாகடிப்பேன். எகிப்தின் தெய்வங்கள் அனைத்தின்மேலும் நான் தீர்ப்பிடுவேன். நானே ஆண்டவர்! இரத்தம் நீங்கள் இருக்கும் வீடுகளில் உங்களுக்கு அடையாளமாக இருக்கும். நான் இரத்தத்தைக்கண்டு உங்களைக் கடந்துசெல்வேன். எகிப்து நாட்டில் நான் அவர்களைச் சாகடிக்கும்போது, கொல்லும் கொள்ளை நோய் எதுவும் உங்கள்மேல் வராது. இந்நாள் உங்களுக்கு ஒரு நினைவு நாளாக விளங்கும். இதனை ஆண்டவரின் விழாவாக நீங்கள் தலைமுறை தோறும் கொண்டாடுங்கள். இந்தவிழா உங்களுக்கு நிலையான நியமமாக இருப்பதாக!

**பதில்பாடல் :** மீட்பின் கிண்ணத்தைக் கையிலெடுத்து,
ஆண்டவர் பெயரைத் தொழுதிடுவேன்.

## நற்செய்தி : மத்தேயு 12 : 1 – 8

அன்று ஓர் ஓய்வுநாள். இயேசு வயல்வழியே சென்று கொண்டிருந்தார். பசியாயிருந்தால் அவருடைய சீடர் கதிர்களைக் கொய்து தின்னத்தொடங்கினர். பரிசேயர்கள் இதைப்பார்த்து இயேசுவிடம், ”பாரும், ஓய்வுநாளில் செய்யக்கூடாததை உம் சீடர்கள் செய்கிறார்கள்” என்றார்கள். அவரோ அவர்களிடமும், ”தாமும் தம்முடன் இருந்தவர்களும் பசியாய் இருந்தபோது தாவீது என்ன செய்தார் என்பதை நீங்கள் வாசித்தது இல்லையா? இறை இல்லத்திற்குள் சென்று அவரும் அவரோடு இருந்தவர்களும் அர்ப்பண அப்பங்களை உண்டார்கள். குருக்கள் மட்டுமே உண்ணக்கூடிய அப்பங்களை அவர்கள் உண்டது தவறல்லவா? மேலும் ஓய்வுநாள்களில் குருக்கள் கோவிலில் பணியாற்றுவது ஓய்வுநாளை மீறும் குற்றமாகாது என நீங்கள் திருச்சட்டத்தில் வாசித்ததில்லையா? ஆனால் கோவிலைவிடப் பெரியவர் இங்கே இருக்கிறார் என நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். ”பலியை அல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன்” என்பதன் கருத்தை நீங்கள் அறிந்திருந்தால் குற்றமற்ற இவர்களைக் கண்டனம் செய்திருக்க மாட்டீர்கள். ஆம், ஓய்வுநாளும் மானிட மகனுக்குக் கட்டுப்பட்டதே” என்றார்.

**தியானம்:** “மனித நினைவுகள் அல்ல இறை சித்தம்” என்ற பெரியவர்களது கூற்று முற்றிலும் உண்மை என்பதனை நற்செய்தி தெளிவாக விளக்குகின்றது. அதே வேளையில் அடுத்தவர்களது செயல்களில் குறைகண்டுபிடிக்கும் நாம் எமது காரியங்களில் எவ்வாறு நடந்து கொள்கின்றோம் எனவும் சிந்திக்க எம்மை அழைக்கின்றது. இறைமகன் இயேசுவின் சீடர்கள் “ஓய்வு நாளில் செய்யக்கூடாததை” செய்கின்றார்கள் என பரிசேயர்கள் ஆதாரபூர்வமாக யூத மத சட்டத்திற்கமைய நிரூபிக்க முயலுகின்றனர். எனினும் “ஓய்வுநாளும் மானிட மகனுக்குக் கட்டுப்பட்டதே” எனவும் “பலியையல்ல இரக்கத்தையே விரும்புகிறேன்” எனத்தொடர்ந்து பதிலளித்து தாம் அனைவரதும் மீட்பர் என்பதனையும் இறைமகன் இயேசு நிரூபிக்கின்றார். இதேமாதிரியான சம்பவம் ஒன்றே “விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த வாழ்வு தரும் உணவு நானே”(யோவான் 6:51) என்ற போது இறைமகன் இயேசுவின் போதனையில் வெறுப்படைந்த பரிசேயர்கள் மத்தியில் இடம்பெறுகின்றது என நாம் நற்செய்தியின் பிறிதொரு பகுதியில் காண்கின்றோம். ஏனெனில் சட்டங்கள், சம்பிரதாயங்கள், சடங்குகள் எம்மை இறைவனை நோக்கி அழைத்துச் செல்லாது. மாறாக ஆழ்ந்த விசுவாசமும், உண்மையான உளமார்ந்த அர்ப்பணிப்பு வாழ்வே முக்கியமானதாகும். அன்று இறைமகன் இயேசுவின் சீடர்கள் முழுமன அர்ப்பணிப்போடு இறைமகனின் பின்னால் தொடர்ந்து சென்றதனால் அங்கே சம்பிரதாயங்கள், யூத மதச் சட்டமீறல்கள் இறை பார்வையில் உடைக்கப்பட்டன என நற்செய்தி சான்று பகர்கின்றது. இவ்வுலக செல்வங்கள், சுகபோகங்கள், சட்டங்கள், சம்பிரதாயங்கள் அனைத்தும் குப்பை எனக்கருதுவோம். “மனித உணர்வுகள் அல்ல இறை சித்தம்” என்ற உண்மையை உணர்ந்து ஏற்றுக்கொள்வோம். “மனிதன் ஒன்றை நினைக்க தேவன் பிறிதொன்றை நினைப்பவர்” என்பதனை எமது வாழ்வில் எத்தனையோ தடவைகளில் நாம் அனுபவ வாயிலாகக் கண்டுள்ளோம். “கல்லினுள் தேரைக்கும் புல்லினுள் பூவிற்கும் வாழ்வளிப்பவர்” எம்மையும் அனுதினமும் போசிக்க விரும்புகின்றார். இறைமகன் இயேசுவின் திருப்பாதம் சரணடைவோம். இறைமகன் இயேசு எமக்காக அனைத்தையும் செய்து முடிப்பார் என நம்பி விசுவசிப்போம். மனிதனோ முகத்தைப் பார்க்கின்றான். இறைவனோ உள்ளத்தைப் பார்க்கின்றார். ஏனெனில் இறுதி நாளில் எமது எதிரிகள் நாணி வெசட்கப்படுமளவிற்கு எம்மை இறைமகன் இயேசு மீட்டுக்கொள்வார்.